ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1994/32 - 2016 නොවැම්බර් මස 22 වැනි අඟහරුවාදා - 2016.11.22

*1994/32 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 22 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**தேசிய அரசப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டம்**

15 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 15 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, பாரிய நகரம் மற்றும் மேற்கத்திய அபிவிருத்தி அமைச்சராகிய பாட்டலீ சம்பிக்க ரணவக்க ஆகிய நான், கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் உள்ளடங்கும் வனாத்தமுல்லை வட்டாரத்தின் தெமட்டகொடையில் அமைந்துள்ளதும், கீழே அட்டவணையில் விவரிக்கப்பட்டதுமான, கொழும்பு மாநகர சபை எல்லைக்குட்பட்ட "உணவுக்காக ஆடுகள் வெட்டுமிடம்" என அழைக்கப்படும் காணியினை இன்றிலிருந்து நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு இக்கட்டளை மூலம் உடைமையாக்குகின்றேன்.*

பாட்டலீ சம்பிக்க ரணவக்க (பா.உ.),
பாரிய நகரம் மற்றும் மேற்கத்திய அபிவிருத்தி அமைச்சர்.

பாரிய நகரம் மற்றும் மேற்கத்திய அபிவிருத்தி அமைச்சு,
17ஆம் மற்றும் 18 ஆம் மாடிகள்,
"சுஹுறுபாய"
சுபூத்திபுர வீதி,
பத்தரமுல்லை.
2016, நவெம்பர் 18.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு மாநகர சபை எல்லைக்குட்பட்டதும், இல. 30, வனாத்தமுல்லை வட்டாரத்தில் தெமட்டகொடை, வைத்தியர் டெனிஸ்டர் த சில்வா மாவத்தையில் அமைந்துள்ளதும், 2012.07.30 ஆந் திகதியிடப்பட்டு உத்தரவுபெற்ற நில அளவையாளர் ரி. ஆர். த சொய்சா என்பவரினால் தயாரிக்கப்பட்ட பூர்வாங்க மாதிரிப்பட இல. 33/2012 இல் காணித்துண்டு இல. 1 என காட்டப்பட்ட காணியானது 2ஏ. 1றூ. 3.77 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது. அதன் எல்லைகள் பின்வருமாறு சூழப்பட்டுள்ளது :

வடக்கு : தனியார் காணி ;
கிழக்கு : வைத்தியர் டெனிஸ்டர் த சில்வா மாவத்தையின் மதிப்பீட்டு இல. G 247, 243 இனைக் கொண்ட காணி ;
தெற்கு : மவுண்ட் பிளசன்ட் வீதியில் மதிப்பீட்டு இல. 4 இலிருந்து 28 வரையான இடம் ;
மேற்கு : முஸ்லிம்களின் மயான பூமி.

*12- 331*


இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.